[28th November 1970

Pension to Municipal Employees

*14. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to extend the benefit of pension to Municipal Employees who retired from service before 14—1—1970 ; and

(*b*) if so, the details thereof ?

நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு உணவு—உள்ளாட்சித் நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன் :

(அ) 14ந் தேதி ஜனவரி, 1970-க்கு முன்பு, பணியிலிருந்து ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ)வும் (இ)யும் : 1970 ஜனவரி 14-ம் தேதிக்கு முன்னர் நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கு வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU D. SANTOSHAM : I understand that there are only about 900 such employees who retired prior to 14—1—1970, and some of them at least are in an advanced age and they may not survive too long. In view of this, will the Government conclude their examination quite early before it becomes too late in their case ?

THE HON. THIRU P.U. SHANMUGHAM : We will try, Sir.

திரு. ஜி. சுவாமிநாதன் : நகர மன்றத் தலைவர்களுடைய கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் 13—1—70-க்கு முன்பு பணியி லிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த ஓய்வு ஊதியம் அளிக்கும் திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னதாகப் பத்திரிகை களில் செய்தி வந்ததைப் பார்த்தேன். அப்படி முடிவு செய்தார் களா ? முடிவு செய்யும் நிலையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் படித்தேன். இப்போதும் அரசாங்கம் அதைப்பற்றி யோசித்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், ரூ. 90-க்கு மேல் ஊதியம் பெற்றவர்களுக்குக் கொடுப்பதாகவும் அதற்குக் குறைவாகப் பெறுகிறவர்களுக்கு இல்லை என்றும் சொல் லப்படுகிறது. ரூ. 90-க்குக் கீழே சம்பளம் வாங்கும் சாதாரண

சிப்பந்திகள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்காமல் மற்றவர்களுக்குக் கொடுப்பது நியாயமில்லை என்பதால், அவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Irrespective of the scale of pay last drawn by them under this proposal even the retired Municipal employees whose minimum scale of pay last drawn was Rs. 90/- or below will get pension.

House sites and Poramboke Lands

*15. *Q.*—THIRU M. AYASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the order of priority in the matter of allocation of House sites and Poramboke lands ; and

(*b*) the priority given to the barber and washerman communities in this matter ?

வீட்டு மனைகள், புறம்போக்கு நிலங்கள்

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வீட்டு மனைகள், புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கீடு விஷயத்தில் யார் யாருக்கு முன்னுரிமை (Priority) அளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இவ்விஷயத்தில் மருத்துவ சமூகத்தினர், சலவையாளர்கள் ஆகியவர்கள் எந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) அரசு புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைகளுக்காக ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது :

(1) ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போதே உயிரிழந்தவர்கள், அங்க ஊனமானவர்களின் குடும்பத்தினர்.

(2) வீடில்லாத ஏழை ஹரிஜனங்கள்.

(3) ராணுவத்தில் பணி புரிந்து கொண்டிருப்பவர்கள்.

(4) மாஜி ராணுவத்தினர்.

(5) இலங்கை, பர்மிய அகதிகள்.

(6) தங்கக்கட்டுப்பாடு உத்தரவினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(7) இதர வீடில்லாத ஏழை மக்கள்.

(இ) இவர்கள் வீடில்லாத ஏழைகளாகக் கருதப்படுவர்.